உ

ஸ்ரீ கட்டமுது விநாயகர் துணை



உ

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, எடமணல் கிராமம்

அருள்மிகு **கட்டமுது விநாயகர்,** சபரிவார விசாலாட்சி அம்பாசமேத

**ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி** ஆலய **ஜீர்ணோத்தாரண**

# அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பத்திரிக்கை

## தை மாதம் 20ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (02-02-2025)

சிவநேயச் செல்வர்களே - புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் மூர்த்தி,ஸ்தலம், தீர்த்தம், இவைகளால் பெருமைவாய்ந்த ஆகாசக்ஷேத்ரமாகிய சிதம்பரம், திருக்கடையூர், திருவெண்காடு, ஞானப்பால் அளித்த சீர்காழி முதலிய க்ஷேத்ரங்களுக்கு அருகாமையில் திருக்குருகாவூர் வெள்ளடை ஈசன் ஆலயத்திற்கு 1 கிலோ மீட்டர் அருகில் திரு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பசியை போக்க இறைவன் எடமணல் கிராமத்தில் அந்தணர் உருவில் வந்துஅமுதும், நீரும் கொடுத்து அருள்புரிந்தும், இன்றும் அந்த இடத்தில் கட்டமுது விநாயகர் என்ற திருக்கோயில் பிரசித்தியாக விளங்கி வருவதும் பக்தர்கள் அறிந்ததே. வரிசையாக பத்து சிவலிங்கத் திருமேனிகள் உள்ளதால் எடமணல் கிராமம் வரிசைபத்து என்றும் வழங்கப்பட்டு வருகிறது. தோப்பின் பல பகுதிகளில் நிலைப்பெற்றுள்ள இந்த பத்து லிங்கங்களில் ஒன்றை ஸ்ரீமான் E.S. ஸ்ரீனிவாச அய்யர் எனும் கிராமப்பெரியவர் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் பெருமுயற்சியுடன் கட்டமுது விநாயகர் கோவில் வளாகத்தில் கொண்டு சேர்த்தார். பிறகு அதைச்சுற்றி ஆலயம் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் என்று நினைத்தார். பின்னர் அவருடைய சந்ததியினர் நல்லமுறையில் சிவலிங்க ஈசனுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் சிவாகம முறைப்படி ஸ்தபதியாரை வைத்து திருக்கோயில் அமைத்தும் கட்டமுது விநாயகர் திருக்கோயிலை புதுப்பித்தும் சுமார் 13 ஆண்டுகளுக்கு முன் கடந்த நந்தனவருடம், வைகாசிமாதம் (31-05-2012) மகாகும்பாபிஷேகம் செய்வித்தனர்

மேற்படி ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு, நிகழும் சுபஸ்ரீ குரோதி வருடம் **தை மாதம் 20-ந் தேதி (02-02-2025)** ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தி, உத்திரட்டாதி நஷத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 9-00 மணிக்குமேல் 10-30 மணிக்குள் மீன லக்னத்தில் இறைவன் அருளாலும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகள் அனுக்கிரஹத்துடனும் **மஹாகும்பாபிஷேகம்** நடைபெறவுள்ளது. அதுசமயம் கிராமமகா ஜனங்கள், பக்தகோடிகள் கலந்து கொண்டு தரிசனம் செய்து எல்லா நலன்களையும் அடையவேண்டுகிறோம்.

Brig. E.S. **கிருஷ்ணமூர்த்தி** VSM (Retd)
நிர்வாக அறங்காவலர்
(M) 9341988512

எடமணல் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி
சமய நற்பணி அறக்கட்டளை

**நிகழ்ச்சி நிரல்**

| தேதி, கிழமை | காலை | நிகழ்ச்சி | மாலை | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|
| 31-01-2025 | 9.00 மணி | அனுக்ஞை, விக்னேசுவர பூஜை, ஸ்ரீ கணபதி ஹோமம், | 5.00 மணி | **முதல் காலம் :** அங்குரார்ப்பனம், ரக்ஷாபந்தனம் |
| வெள்ளிக்கிழமை | | ஸ்ரீ லட்சுமி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. | 6.00 மணி | கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாகசாலை பிரவேசம், |
| தை மாதம் 18 | 11.00 மணி | வாஸ்து சாந்தி மற்றும் பூர்வாங்க பூஜைகள் | | யாகசாலை பூஜைகள், ஹோமம். |
| | 12.00 மணி | தீர்த்த சங்கிரஹணம். | 9.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 01-02-2025 | 8.30 மணி | **இரண்டாம் காலம்:** விசேஷ சந்தி, வினாயகர் வழிபாடு. | 5.00 மணி | **மூன்றாம் காலம் :** விசேஷ சந்தி, யாகசாலை பூஜைகள், ஹோமம் |
| சனிக்கிழமை | | யாகசாலை பூஜை ஹோமம். | 7.00 மணி | ப்ரம்மச்சாரி பூஜை, கன்யகா பூஜை, சுவாசினி பூஜை, |
| தை மாதம் 19 | 11.00 மணி | கோபூஜை, ஷன்னவதி ஹோமம் | | தம்பதி பூஜை, வடுக பூஜை |
| | 11.30 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை | 8.00 மணி | திரவ்யாஹுதி |
| | 12.00 மணி | அஷ்டபந்தன மருந்து சாத்துதல் | 9.00 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை |
| 02-02-2025 | 7.00 மணி | **நான்காம் காலம்:** விநாயகர் வழிபாடு, யாகசாலை பூஜைகள், ஹோமம் | 9.30 மணி | **அனைத்து விமான கும்பாபிஷேகம்** |
| ஞாயிற்றுக்கிழமை | 8.00 மணி | பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம் | 10.00 மணி | **மூலாலய மஹா கும்பாபிஷேகம்** |
| தை மாதம் 20 | 8.30 மணி | நாடி சந்தானம், தத்வார்ச்சனை, ஸ்பர்சாஹுதி | 10.30 மணி | மகா தீபாராதனை, அருட்பிரசாதம், அன்னதானம் வழங்குதல் |
| | 9.00 மணி | மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை | 11.30 மணி | யஜமான உற்சவம் |
| | | யாத்ரா தானம், கடங்கள் புறப்பாடு | | |

ஆலய திருப்பணி இயக்குனர்: ஸ்ரீ **N. ராமன்,** அறங்காவலர்
கும்பாபிஷேக வைபவத்தை நடத்தி தருபவர் :
சர்வசாதகம் சாட்டியக்குடி சிவஸ்ரீ **G. தியாகராஜ சிவாச்சாரியார்,**
நாகை மாவட்ட செயலாளர், ஆதிசைவ சிவாச்சாரியார்கள் கூட்டமைப்பு, மற்றும் **குழுவினர்கள்**
ஆலய சிவாச்சாரியார்கள் : **சிவஸ்ரீ முத்துமணி சிவாச்சாரியார்,**
**சிவஸ்ரீ வாகீசன் சிவாச்சாரியார்**
திருப்பணி தொழில்நுட்ப பொருப்பாளர் : திரு. **அபிநயா மா. ஆறுமுகம்,** ஸ்தபதியார், கொள்ளிடம்

**Bank details for Remittance**

Edamanal Sri Kasi Viswanathaswamy
Religious and Welfare Trust.
City Union Bank Ltd., Sirkali.
SB A/c No.500101010277399
IFS Code: CIUB0000202.
UPI ID : eze0141765@CUB
Website: https://www.eskvtemple.org

EDAMANAL SRIKASIVISWANATHASWAMY R
Scan & Pay

ஸ்ரீதர் ஆப்செட், சீர்காழி.